செ.வெ.எண்.47 நாள்: 20.10.2020

# தூத்துக்குடி மாவட்டத்தில் உணவு பாதுகாப்புத் துறையின் "சரியான உணவருந்துதல் சவால்" திட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்

---

தூத்துக்குடி மாவட்ட உணவு பாதுகாப்புத் துறையின் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.10.2020) நடைபெற்றது இக்கூட்டத்தில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையரகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள "சரியான உணவருந்துதல் சவால்" (Eat Right Challege) என்ற திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அத்திட்டத்திற்கான லோகோவை (Logo) வெளியிட்டுத் துவக்கி வைத்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

உணவு பாதுகாப்பு ஒழுங்குமுறைகளை சரியாக அமுல்படுத்தி உணவுப் பாதுகாப்பை வலுவாக உறுதி செய்யவும், பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான உணவை தயாரிப்பாளர்கள் வழங்குவதை ஊக்குவிக்கவும், பொதுமக்களிடையே சுகாதாரமான உணவுப் பழக்கத்தை ஏற்படுத்தி சுகாதாரமான உணவு வகைகளுக்கு சந்தையில் தேவையை அதிகப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காகவும், இந்திய உணவுப் பாதுகாப்பு தர நிர்ணய ஆணையரகம் "சரியான உணவருந்துதல் சவால்" (Eat Right Challege) என்ற போட்டித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்திற்காக இந்திய அளவில் 150 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 10 மாவட்டங்களில் தூத்துக்குடி மாவட்டமும் இடம்பெற்றுள்ளது. எனவே, இப்போட்டியில் கலந்து கொண்டு சிறப்பாக திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும். "இத்திட்டத்தில் உள்ள ஐந்து வகை பிரிவுகளிலும் உணவு பாதுகாப்புத் துறை சிறப்பாக செயல்பட வேண்டும். உணவு வணிகர்களில் குறைந்தது 90 சதவிகிதத்தினர் ஜனவரி 2021க்குள் உணவு பாதுகாப்புத் துறை உரிமம்/பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கு ஏதுவாக சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டும். 300 கண்காணிப்பு உணவு மாதிரிகள் மற்றும் 90 சட்டப்பூர்வ உணவு மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்ய வேண்டும். அனைத்து அங்கன்வாடி மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் சரியான உணவருந்துதல் குறித்து பயிற்சி அளிக்க வேண்டும். உணவு வணிகருக்கும் உணவு பாதுகாப்பு குறித்து பயிற்சி அளித்து சான்றிதழ் அளிக்க வேண்டும். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையரகத்தில் சிறப்புச் சான்றிதழ் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவு வணிகர்கள் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006ன் வரைமுறைகளுக்குட்பட்டு வணிகம் செய்ய வேண்டும். நுகர்வோர்கள் உணவு பொருட்களில் குறைபாடுகள் இருந்தால் உணவு பாதுகாப்புத்துறை மாநில வாட்ஸ் அப் எண் 94440 42322-க்கு புகார்களை அனுப்ப வேண்டும். அனைத்து பிரிவினர்களும் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து "சரியான உணவருந்துதல் சவால் திட்டத்தில்" தூத்துக்குடி மாவட்டம் முதலிடத்தை பெறும் வகையில் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., குழுவின் துணைத் தலைவர் (ம) துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.கிருஷ்ண லீலா, குழுவின் ஒருங்கிணைப்பாளர் (ம) உணவு பாதுகாப்புத் துறையின் மாவட்ட நியமன அலுவலர் மரு.மாரியப்பன், முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஞானகௌரி, மாவட்ட தொழில் மைய மேலாளர் திரு.கண்ணன், தூத்துக்குடி மாவட்ட ஓட்டல் அசோசியேசன் தலைவர் திரு.செந்தில்ஆறுமுகம், துடிசியா தலைவர் திரு.நேருபிரகாஷ், தூத்துக்குடி உப்பு அசோசியோசன் தலைவர் திரு.எம்.எஸ்.தேன்ராஜ், உணவு பாதுகாப்பு அலுவலர்கள் திரு.சிவபாலன், திரு.காளிமுத்து, திரு.முருகேசன், திரு.நாகசுப்பிரமணி, திரு.முனியராஜ், திரு.சக்திமுருகன் மற்றும் பல்வேறு துறைகளின் அலுவலர்கள், உணவு வணிகர் சங்கப் பிரதிநிதிகள், நுகர்வோர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.